# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),

நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 8345/விசாரணை/E/2024</u>**

திரு.K.ராமு -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை, சேலம்-1. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>இறுதி ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 16.02.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நிர்வாக அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக சுருக்கெழுத்து தட்டச்சர் திரு.கோ.மணிகண்டன் 02.04.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 20.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 26.02.2026 அன்று ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கியதன் அடிப்படையில், மேல்முறையீட்டாளர் 26.02.2026 அன்று தங்கள் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட்ட பின்பாக, ஏற்பளிப்பு கடிதம் அளித்துள்ளதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. மேல்முறையீட்டாளர் 26.02.2026 தேதியிட்ட கடிதத்தில், ஆணையத்தின் உத்தரவின்படி 26.02.2026 அன்று தான் முதல்வர் அலுவலகத்தில் 06.02.2024 தேதியிட்ட பதிவேடுகளை பார்வையிட்டதாகவும், அதில் தனது பெயரில் விபத்து பதிவேடு பதிவு செய்யப்படவில்லை என அறிந்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. பொதுத் தகவல் அலுவலரால் இவ்வாணையத்தின் உத்தரவு நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 09.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8345/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை,
சேலம்-1.

திரு.K.ராமு த/பெ.திரு.A.கருப்பண்ணன்
24/5-2 குடுமியான் தெரு,
22வது வார்டு, சிவதாபுரம் (அஞ்சல்),
சேலம்-686 307.

Copy to: File

RJ/PS 10.4